அரசுப் பணிகளில் நேரடி நியமனத்திற்கான வயது உச்சவரம்பினை ஐந்து ஆண்டுகள் உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ச. ஜோசப் விஜய்

அவர்கள் உத்தரவு

செய்தி வெளியீடு எண்: 941 **நாள்: 30.10.2026**

<u>செய்தி வெளியீடு</u>

<u>அரசுப் பணிகளில் நேரடி நியமனத்திற்கான வயது உச்சவரம்பினை ஐந்து ஆண்டுகள் உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் உத்தரவு</u>

போட்டித் தேர்வர்களின் கோரிக்கைகளை ஏற்று, அரசுப் பணிகளில் நேரடி நியமனத்திற்கான வயது உச்சவரம்பை தற்போதைய விதிகளில் உள்ளதை விட 5 ஆண்டுகள் உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்**.

மேற்கண்ட வயது வரம்பு உயர்வானது, இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு (BC, BC(M), MBC & DNC, SC, ST, ஆதரவற்ற விதவைகள்) ஏற்கனவே உள்ள வயதுச் சலுகையோடு கூடுதலாக அமையும்.

அவ்வாறு உயர்த்தப்படும் வயது உச்சவரம்பு உதாரணத்திற்குப் பின்வருமாறு அமையும்:–

தேர்வு	பொதுப் பிரிவினர்		ஒதுக்கீட்டுப் பிரிவினர்		மாற்றுத்திறனாளிகள்			
					பொதுப் பிரிவினர்		ஒதுக்கீட்டுப் பிரிவினர்	
	தற்போதைய வயது வரம்பு	உயர்த்தப்பட்ட வயது வரம்பு	தற்போதைய வயது வரம்பு	உயர்த்தப்பட்ட வயது வரம்பு	தற்போதைய வயது வரம்பு	உயர்த்தப்பட்ட வயது வரம்பு	தற்போதைய வயது வரம்பு	உயர்த்தப்பட்ட வயது வரம்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
குரூப் – I	32	37	37	42	42	47	47	52
குரூப்–II & II–A	30	35	உச்ச வயது வரம்பில்லை		40	45	உச்ச வயது வரம்பில்லை	

CMOTN

<table>
<tr><th>(1)</th><th>(2)</th><th>(3)</th><th>(4)</th><th>(5)</th><th>(6)</th><th>(7)</th><th>(8)</th><th>(9)</th></tr>
<tr><td>குரூப்–IV (Having higher qualification)</td><td rowspan="3">30</td><td rowspan="3">35</td><td colspan="2">உச்ச வயது வரம்பில்லை</td><td rowspan="3">40</td><td rowspan="3">45</td><td colspan="2">உச்ச வயது வரம்பில்லை</td></tr>
<tr><td>குரூப்–IV (Not having higher qualification – BC, BC(M), MBC & DNC)</td><td>32</td><td>37</td><td>42</td><td>47</td></tr>
<tr><td>SC, ST and Dest. Widow</td><td>35</td><td>40</td><td>45</td><td>50</td></tr>
</table>

இந்த வயது உச்சவரம்பு உயர்வு இன்று (30.10.2026) முதல் ஐந்து ஆண்டுகள் வரை நடைமுறையில் இருக்கும்.

தமிழ்நாடு அரசின் இந்த உத்தரவு மூலம், வயது வரம்பு முடிவடையும் நிலையில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ்நாட்டைச் சேர்ந்த போட்டித் தேர்வர்கள் மற்றும் இளைஞர்கள் பெருமளவில் பயனடைவர்.

....

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9